செ.வெ. எண்: 173 நாள்:03.03.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.3.2012) தலைமைச் செயலகத்தில், சென்னை – தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் 20 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை காணொலிக் காட்சி (Video conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

சென்னை – தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு புதிய அடுக்கு மாடி கட்டடம் கட்டுவதற்காக வருவாய்த் துறையால் 27.4.2006 அன்று நில ஒதுக்கீட்டிற்கான அரசாணை வெளியிடப்பட்டது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டு, மொத்தம் 20 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இப்புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இப்புதிய கட்டடம் அடித்தளத்துடன் கூடிய 2 அடுக்குகளைக் கொண்டது. இப்புதிய கட்டடம் ஒரே நேரத்தில் 300 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான வசதி கொண்டது. தற்பொழுது இயங்கி வரும் பழைய கட்டடத்தில் உள்ள பல் மருத்துவக் கல்லூரி புறநோயாளிகள் பிரிவு, இதர வசதிகளுடன் முழுமையாக இப்புதிய கட்டடத்திற்கு மாற்றப்படும். இப்புதிய கட்டடத்தின் பயனாக தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை இந்தியாவிலேயே அதிநவீன வசதிகளுடன் கூடிய மற்றும் ஒரே நாளில் கிட்டத்தட்ட 1000 முதல் 1500 நோயாளிகளுக்கு அனைத்து வகையான பிரிவுகளிலும் சிகிச்சை அளிக்கக்கூடிய வசதியுள்ள மருத்துவமனை என்ற சிறப்பினை பெறும். சென்னை, தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள இப்புதிய கட்டடத்தை இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி (Video conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் ஆகியோர் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 3.3.2012